# தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

"'அவராலேயன்றி (இயேசு கிறிஸ்துவாலேயன்றி) வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" அப். 4 : 12.

"குமாரனிடத்தில் (இயேசு கிறிஸ்துவினிடத்தில்) விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும்" யோவான் 3 : 36.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசு கிறிஸ்துவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" யோவான் 3 : 16.

"எல்லோரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களானோம்" ரோமர் 3 : 23.

"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே......நம்மை இரட்சித்தார் தீத்து 3 : 5.

"......கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" கலாத்தியர் 2 : 16.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் (இயேசு கிறிஸ்து), உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" 1 யோவான் 1 : 9.

"அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" 1 யோவான் 1 : 7.

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" ரோமர் 10 : 9.

"இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" 2 கொரிந்தியர் 6 : 2.

"...இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்,...உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள்" எபிரேயர் 3 : 7, 8.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" அப். 16 : 31.

அவருடைய (இயேசு கிறிஸ்துவினுடைய) நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" யோவான் 1 : 12.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India